முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர்
முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக
எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆனி மாதம் 10 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆனி மாதம் 17 திகதி வரை
(25.06.2023 ஞாயிறு முதல் 02.07.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தானமும் தருமமும் கண்ணியமாகவே
   தலைமைக்கு அணிகலனாகக் கொண்ட
   ஞானபூமி இந்தியா தமிழகத்தில்
   நாட்டிடுவேன் சோபகிருது மிதுனதிங்கள்
2. திங்களிலே தசதிகதிமேல் மூவையீர்திகதி வரை
   தேசமதில் நடக்கும் வாரநிகழ்வாக
   இங்கனமே வருங்கால பலன்குறித்து
   இயம்பிடுவேன் அரங்கஞானி கேட்க
3. கேட்கவே வார ஆசிதனை
   கூறிடுவேன் அகத்திய மகரிஷியும்
   தட்டாது மேலும் கீழுமான
   தமிழக இந்திய ஆளுமைகள்
4. ஆளுமைகள் பேதம் கருதா
   அத்தன் சேய்போல அன்பு
   வலுவாகக் கொண்டு இயங்கி
   வரலாறு கண்ட காலம் கடந்து
5. கடந்துமே இந்தக் காலமதில்
   காழ்புணர்ச்சி இனமத பேதம்
   இடரென அளவிலா மோசடிகள்
   இதில் பங்கீடு பதுக்கலென
6. என நீதியை மறந்து தருமம்மறந்து
   இருக்கின்ற பங்காளி கலகம்
   ஞானமிலா செயல் வடிவம்
   நாட்டுக்கே பேராபத்தாக நேரும்

7. நேருமை கொண்ட அரசியல் களமாக
நீதிக்காயினும் அஞ்சி நின்று
தருமம் காக்கும் வறுமை போக்கும்
தயவு நிறைந்த தன்னலமற்றநல்
8. நல்தலைமைகளாக செயல்வடிவம்
நாட்டிடுவேன் கொண்டு நடந்திட
இல்லை பற்றாக்குறை என்ற
இழிவான நிலைகள் காணா
9. காணா இந்தியா தமிழகம்
கடமையிலும் செயல் திட்டத்திலும்
ஞானமோடு நடந்திட பாகுபாடின்றி
நல்லாட்சி ஞான ஆட்சிக் காலமாக
10. ஆகவே ஒற்றுமைபட நடந்துமே
அகிலம் வியக்க மாற்றம்பெறும்
மிகையான கயமைகள் அகன்றோடி
மேலானவர்கள் இணைய தலைமைகள் சிறக்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆனி மாதம் 10ம் நாள் 25.06.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 17ம் நாள் 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

நாட்டை ஆளும் தலைமைக்கு அணிகலனாக தானமும், தருமமும், கண்ணியமும் கொண்ட தலைமைகளினால் ஞானத்துடன் ஆட்சி புரிந்திட்ட ஞான பூமியான இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஆனி மாதம் 10ம் நாள் 25.06.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 17ம் நாள் 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மத்திய மாநில ஆளுமைகள் பேதம் கருதாமல் தந்தை மகன் போல அன்பு செலுத்தி ஒருவருக்கு ஒருவர் ஆதரவாய் செயல்பட்டு வரலாறு படைத்திட்ட

காலங்கள் எல்லாம் தற்காலத்தில் மறைந்து போய்விட்டதப்பா. தற்காலத்திலே ஒருவருக்கு ஒருவர் ஆளுமையிலே காழ்புணர்ச்சி கொண்டும் இனமதபேதம் கொண்டும் பிறருக்கு துன்பம் விளைவிக்கும் வகையிலே அளவிலாது மோசடிகளை செய்து வருவதுடன் மோசடிகளிலே பங்கீடு செய்தும் பதுக்கல் செய்தும் வருவதுடன் நீதிக்கு புறம்பாகவும் தருமத்தை மறந்தும் நடப்பதுடன் சகோதர தன்மை மறந்து ஞானம் இல்லாமல் செயல்பட்டு வருவது நாட்டிற்கே பேராபத்தாக முடியுமப்பா.

ஆதலினாலே இனிமேலாகினும் நேர்மையாக அரசியல் களத்தினை காணவேண்டும். நீதிக்கு அஞ்சி நடந்திட வேண்டுமப்பா தருமத்தினை பாதுகாக்க வேண்டுமப்பா. வறுமையை போக்கி தன்னலம் இல்லாமல் நடக்கும் தலைமைகளாக செயல்பட்டால் துன்பம் வராமல் நாடு காக்கப்படும். இல்லை என்கிற பற்றாக்குறை என்ற இழிவான நிலையை இந்தியா தமிழகம் அடையாமல் கடமையிலும் செயலிலும் நடப்பதுடன் பற்றாக்குறை போக்குமாறு செயல்திட்டங்களை வகுத்து செயல்பட்டால் பாகுபாடு இல்லாமல் சமமாக நடந்திட்டால் நல்லாட்சி காலமாக அமையுமப்பா.

மேலும் கீழும் என பாகுபாடு இன்றி ஒற்றுமைபட நடந்து கொண்டால் இந்தியா தமிழகம் உலகமே வியக்குமாறு நல்ல முன்னேற்றத்தை நாடு அடையும். நாட்டில் உள்ள கள்ளத்தனங்கள் நாட்டை விட்டு அகன்றோடி மேன்மையான மக்கள் ஒன்று கூடி தலைமைகள் சிறப்படைவார்களப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–